**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாரூர்**

**2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26 ம் நாள் வியாழக்கிழமை**

O.S. 83/2018

பிரதிவாதிகள் தரப்பு சாட்சியாகிய DW2-ன் வாக்குமூலம் (1969 -ம் ஆண்டின் 44 -வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. S. முஹம்மது பாசில், M.Sc., B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | தியாகராஜன் | தாலுக்கா : | திருவாரூர் |
| த/பெ : | காளியப்பன் | கிராமம் : | பவித்ரமாணிக்கம் |
| ஜாதி : | | தொழில் : | கொத்தனார் |
| சமயம் : | | வயது : | 55/26 |

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் தரப்பினர் அல்ல. பிரதிவாதிகள் தரப்பில் எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் நான் சொல்லி வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டதாகும். அதில் கண்டுள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் இந்நீதிமன்ற அழைப்பாணையின் பெயரில் சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு விபரம் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். இன்று வழக்கு வாய்தா குறித்து யார் எனக்கு சொன்னது என்றால் 2 ம் பிரதிவாதி மணிசங்கர் சொல்லி தெரியும். மேற்படி மணிசங்கர் எங்கு இருக்கிறார் என்றால் அவர்தாயாருக்கு உடல்நிலை சரியில்லாததால் சென்னையில் இருக்கிறார். எந்த நீதிமன்றத்தில் இந்த வழக்கு நடைபெற்று வருகிறது என்ற விபரம் எனக்கு தெரியாது

என்றால் சரிதான். நான் வசித்துவருவது இளவங்கார்குடி பெரும்புகளூர் கிராமத்தில்தான் நான் வசித்துவருகிறேன் என்றால் சரிதான். இளவங்கார்குடி கிராமமும் பவித்ரமாணிக்கமும் ஒரே ஊரா என்றால் ஒரே ஊர் தான். என் முதல் விசாரணையில் நான் பவித்ரமாணிக்கம் கிராமத்தில் வசித்துவருகிறேன் என்று கூறினேன் என்றால் சரிதான். என் ஆதார் அடையாள அட்டையில் பவித்ரமாணிக்கம் கிராம முகவரி இல்லை என்றால் சரிதான். (**என் ஆதார் அடையாள அட்டை நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டது வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டது**).

வாதி மற்றும் 2ம் பிரதிவாதியின் தகப்பனாரிடையே குடும்ப சொத்துகள் சம்மந்தமாக வாய்மொழியாக பாகபிரிவினை செய்துகொண்டது தொடர்பாக எனக்கு தெரியாது என்றால் சரிதான். பவித்ரமாணிக்கம் காமராஜர் நகரில் உள்ள வீடு யாருக்கு சொந்தமானது என்றால் சேகர் குடியிருந்தார். யாருக்கு சொந்தமானது என்று எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி பாலு எங்கு குடியிருந்தார் என்றால் திருவாரூர் பவித்ரமாணிக்கம் GRT கார்டனில் குடியிருந்தார். பாலு எப்போது இறந்தார் என்ற விபரம்எனக்கு தெரியுமா என்றால் நான் வெளியூரில் இருந்தேன் எனக்கு தெரியாது. நான் கொத்தனார் வேலை செய்துவருவதால் அடிக்கடி வெளியூர்சென்று வருவேன் என்றால் சரிதான். என் முதல் விசாரணையில் சொல்லியுள்ள தாவா வீடு யாரால் எப்போது கட்டப்பட்டது என்ற விபரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வாதி சேகருக்கு எப்போது திருமணம் நடந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். என் முதல் விசாரணையில் சேகர் திருமணத்திற்கு முன்பு என்று நான் சொல்லியிருக்கும் காலம் குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான். என் முதல் விசாரணையில் நான் சொல்லியுள்ள இட்லி கடை என்பது ரோட்டில் உள்ளது தான்

தாவா இடத்தில் இல்லை என்றால் சரிதான். கதவிலக்க எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதி சேகர் எங்கு வசித்துவருகிறார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் கேள்விப்பட்டவகையில் புதுகோட்டையில் வசித்துவருகிறார். அவர் அக்காவீடு அங்குதான் உள்ளது. எனக்கு வழக்கு பற்றி எந்த விபரமும் தெரியாது என்றாலும் நான் முதல் விசாரணையில் கூறியுள்ள முகவரியிலே வசித்துவரவில்லை என்றாலும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

//மேற்படியார் தரப்பில் இன்றைய விசாரணையின்போது **வா.சா.ஆ.9** ஆவணம் மட்டும் குறியீடு செய்யப்பட்டது.//

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாரூர்**

**2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26 ம் நாள் வியாழக்கிழமை**

O.S. 83/2018

**பிரதி**வாதிகள் தரப்பு சாட்சியாகிய DW3-ன் வாக்குமூலம் (1969 -ம் ஆண்டின் 44 -வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. S. முஹம்மது பாசில், M.Sc., B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | காளிதாஸ் | தாலுக்கா | : | திருவாரூர் |
| த/பெ | : | தங்கராசு | கிராமம் | : | பவித்ரமாணிக்கம் |
| ஜாதி | : | | தொழில் | : | வியாபாரம் |
| சமயம் | : | | வயது | : | 40/26 |

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் தரப்பினர் அல்ல. பிரதிவாதிகள் தரப்பில் எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் நான் சொல்லி வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டதாகும். அதில் கண்டுள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

**வாதி தரப்பு குறுக்குவிசாரணை**

நீதிமன்ற அழைப்பாணையின் பெயரில் நான் சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. மாசிலாமணிபிள்ளையின் வாரிசுகள் திருமணம் எப்போது நடைபெற்றது என்பது குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான். மாசிலாமணிபிள்ளை வாரிசுகளிடையே வாய்மொழி பாகபிரிவினை ஏற்பட்டது குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். கேள்விபட்டுள்ளேன். 1ம் பிரதிவாதி பாலு எந்த தேதியில் எங்கு இறந்தார் என்ற விபரம் எனக்கு தெரியுமா

என்றால் தெரியாது. வாதி சேகருக்கு எப்போது திருமணம் நடந்தது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதி சேகர் எப்போதிலிருந்து காமராஜர் நகரில் குடியிருந்து வருகிறார் என்று சொல்கிறேன் என்றால் சுமார் 10 ஆண்டுகளாக குடியிருந்துவருகிறார். தற்போது வாதி சேகர் எங்கு குடியிருந்து வருகிறார் என்றால் புதுகோட்டையில் வசித்துவருவதாக கேள்விபட்டுள்ளேன். தாவா வீடு எந்த ஆண்டு கட்டியது யாரால் கட்டப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள படி தாவா சொத்தில் உள்ள கடையில் யார் யார் வாடகை தாரர்களாக இருந்து வருகிறார்கள் என்றால் நான் வாடகை தாரராக இருந்து வருகிறேன். (சாட்சி பின்னிட்டு நான் பராமரித்து வருவதாக கூறினார்). என்னிடம் தாவா கடையை யார் கொடுத்தார் என்றால் ஜெயவர்தன் என்பவர் கொடுத்தார். திரு.வி.க. நகரில் உள்ள வீட்டை விற்பனை செய்த விபரம் தொடர்பாக எனக்கு தெரியாது என்றால் சரிதான் .சேகர் தொழில் செய்துவரவில்லை என்ற விபரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சாலை விரிவாக்க பணிக்காக தாவா சொத்தில் உள்ள வீட்டின் ஒருபகுதி கையகபடுத்தப்பட்டதா என்றால் ஆமாம். மேற்படி கையகபடுத்தப்பட்ட நிலத்திற்கு நஷ்டயீடு தொகை யார் பெற்றார் என்ற விபரம் தெரியாது என்றால் சரிதான். எனக்கு இந்த வழக்கு தொடர்பாக எதுவும் தெரியாது என்றாலும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

//மேற்படியார் தரப்பில் இன்றைய விசாரணையின்போது ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.//

MOHAMED BASIL S

Digitally signed by MOHAMED BASIL S
Date: 2026.02.26 18:48:21 +0530